சுருக்கம்

சமூக நலம் – குழந்தைகள் நலம் – சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறையின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தினை தமிழ்நாட்டில் உள்ள முகாம்வாழ் இலங்கை தமிழர்களுக்கும் நீட்டித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்ட(சந–5)த்துறை

அரசாணை (நிலை) எண். 55

நாள் : 13 .08.2011
ஆடி 28, திருவள்ளுவர் ஆண்டு 2042

படிக்கப்பட்டது:–

1) அரசாணை (நிலை) எண்.199, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, நாள் 31–12–2001.
2) அரசாணை (நிலை) எண்.159, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, நாள் 09–08–2010.
3) அரசாணை (நிலை) எண்.480, பொது (மறுவாழ்வு)த்துறை, நாள் 07–06–2011.
4) சமூக நல இயக்குநரின் கடித ந.க.எண்.44975/குந.3/2007, நாள் 03–08–2011.

*****

ஆணை:

பெண் சிசுக் கொலையை ஒழிப்பதற்காகவும், ஆண் குழந்தைகளை மட்டுமே விரும்பும் போக்கை கட்டுப்படுத்தவும், பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்திற்கு விதிகள் ஏற்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்த 2010–2011 –ஆம் நிதியாண்டிற்கு ரூ.75.00 கோடி செலவினம் அனுமதித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2) மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் ஏனைபவற்றுடன், சமூக நலத்துறையின் கீழ் செயல்படுத்தப்படும் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தை முகாம் வாழ் இலங்கை தமிழர்களுக்கும் விரிவுபடுத்தலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

3) மேற்படி அரசாணையினைத் தொடர்ந்து, சமூக நல இயக்குநர் அரசுக்கு அனுப்பியுள்ள தனது கருத்துருவில், அகதிகள் மறுவாழ்வு ஆணையரகத்தின் மூலம் பெறப்பட்ட கடிதத்தின் மூலம், தமிழ்நாட்டில் உள்ள இலங்கை அகதிகள் முகாம்களில் வசிக்கும் இலங்கை தமிழர்களில் 1356 பயனாளிகள் இத்திட்டத்தின் கீழ் பயன்பெற வாய்ப்புள்ளதாக அறியப்படுகிறது என்றும், முகாம் வாழ்

இலங்கை தமிழர்களுக்கும் இத்திட்டத்தினை விரிவுப்படுத்துவதனால், கீழ்க்கண்டவாறு கூடுதல் செலவினம் எதிர்நோக்கப்படுகிறது என்றும் தெரிவித்துள்ளார்:-

| திட்டம் | எதிர்நோக்கப்படும் செலவினம் |
|---|---|
| திட்டம் I<br>(ஒரு பெண் குழந்தை உள்ள குடும்பம்) | 326 X ரூ.22,200/– = ரூ.72,37,200 |
| திட்டம் II<br>(இரு பெண் குழந்தைகள் உள்ள குடும்பம்) | 515 X 2 X ரூ.15,200/– = ரூ.1,56,56,000 |
| கூடுதல் | ரூ.2,28,93,200 அல்லது ரூ.2.28 கோடி |

எனவே, இத்திட்டத்திற்காக ரூ.2.28 கோடிக்கு நிதி ஒப்பளிப்பு வழங்குமாறும், 2011–2012ஆம் ஆண்டிற்கு சமூக நலத்துறையின் கீழ் தற்போது செயல்பட்டு வரும் இத்திட்டத்திற்கான கணக்கு தலைப்புகளின் கீழ் ரூ.75.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும், முகாம்களில் தங்கியுள்ள இலங்கைத் தமிழர்களுக்கும் இத்திட்டத்தினை விரிவுப்படுத்துவதற்கு ஆகும் கூடுதல் செலவினம் தற்போதுள்ள நிதி ஒதுக்கீட்டிற்குள் மேற்கொள்ளப்படும் என்றும் எதிர்காலத்தில், எதிர்நோக்கப்படும் கூடுதல் விண்ணப்பங்களுக்கு தேவையான கூடுதல் நிதி ஒதுக்கீடு திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கம் 2011–12ல் கோரப்படும் என சமூக நல இயக்குநர் தெரிவித்துள்ளார்.

4) சமூக நல இயக்குநரின் கருத்துருவை கவனமுடன் பரிசீலித்த அரசு, அதனை ஏற்று, சமூக நலத்துறையின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தை, தமிழ்நாட்டில் உள்ள முகாம் வாழ் இலங்கை தமிழர்களுக்கும் விரிவுபடுத்தி ஆணையிடுகிறது. மேலும், பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தில் வகுத்துள்ள விதிமுறைப்படி குழந்தை பிறந்த நாளிலிருந்து மூன்றாண்டுகள் வரை மனு செய்ய தகுதியுள்ளதாக அனுமதித்ததன் அடிப்படையில், இந்த அரசாணை வெளியிடப்படும் நாளிலிருந்து பெறப்படும் மனுக்கள், மூன்றாண்டு முன்புவரை பிறந்த குழந்தைகள், இத்திட்டத்தில் பயன்பெற தகுதியுடையவர் என்ற அடிப்படையில், இத்திட்டத்தின் கீழ் 1356 பயனாளிகள் பயனடைய தேவைப்படும் கூடுதல் நிதியான ரூ.2.28 கோடியை (ரூபாய் இரண்டு கோடியே இருபத்தி எட்டு இலட்சம் மட்டும்) இத்திட்டத்திற்காக சமூக நலத்துறைக்கான மானியக் கோரிக்கை 2011–2012ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகையான ரூ.75.00 கோடியில் இருந்து மேற்கொள்ள அனுமதி அளித்தும் அரசு ஆணையிடுகிறது.

5) மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்படும்:-

i. 2235 – சமூகப் பாதுகாப்பும் நலனும் – 02 சமூக நலன் 102 குழந்தைகள் நலன் – பதினொன்றாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JX – பெண் குழந்தை நலனுக்கான திட்டத்திற்கு நிதியுதவி – 09 உதவித் தொகை – 03 குறிப்பிட்ட திட்டத்திற்கான உதவித் தொகை.
(த.தொ.கு. 2235-02-102-JX-0939).

ii. 2235 – சமூகப் பாதுகாப்பும் நலனும் – 02 சமூக நலன் 789 ஆதி திராவிடருக்கான சிறப்புச் கூறுகள் திட்டம் – பதினொன்றாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள்– II மாநிலத் திட்டம்– JN – சிறப்புக் கூறுகள் திட்டத்தின் கீழ் பெண் குழந்தைகள் நலத்திற்கான நிதியுதவித் திட்டம் – 09 உதவித் தொகை – 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித்தொகை. (த.தொ.கு.2235-02-789–JN- 0935)

6) இவ்வரசாணை, நிதித்துறையின் ஒத்திசைவுடன் அலுவல் சார்பற்ற எண்.2091/FS/P/2011 நாள் 13.08.2011, கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.409 (நானூற்று ஒன்பது)–ன்படி வெளியிடப்படுகிறது.

( ஆளுநரின் ஆணைப்படி)

ஷீலா பாலகிருஷ்ணன்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
சமூக நல இயக்குநர், சென்னை–5.
முதன்மைச் செயலாளர் / ஆணையர்,
அகதிகள் மறுவாழ்வு மற்றும் தமிழகத்திற்கு வெளியே வாழும் தமிழர்கள் நல ஆணையரகம், சென்னை–5.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–5.
மாநிலக் கணக்காயர், சென்னை–18.
அனைத்து மாவட்ட சமூக நல அலுவலர்கள்
(சமூக நல இயக்குநர் வழியாக)
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் (சமூக நல இயக்குநர் வழியாக)
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்
(சமூக நல இயக்குநர் வழியாக)
நகல்:
நிதித் (சமூக நலம்) துறை, சென்னை –9.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை –9.
மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

ரா. விஜயலட்சுமி
13/8/11
பிரிவு அலுவலர்
13/8.11